**செய்தி வெளியீடு எண்: 086** **நாள்: 02.02.2019**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (02.02.2019) சேலம் மாவட்டம், கந்தம்பட்டியில் புதிய சாலை மேம்பாலம் மற்றும் உயர்மட்டப் பாலம் அடிக்கல் நாட்டு விழாவில் ஆற்றிய உரை**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

உங்கள் சட்டப்பேரவை உறுப்பினர்களது கோரிக்கைகள் மற்றும் பொது மக்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றும் விதமாக, கந்தம்பட்டி பைபாஸ் சாலையில் புதிய மேம்பாலம் கட்டுகின்ற நிகழ்ச்சிக்கு வருகை தந்துள்ள அனைவருக்கும் பணிவான வணக்கத்தைத் தெரிவித்து, இன்றைக்கு சேலம் மாநகரத்திலே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது என்பதை அம்மாவின் கவனத்திற்கு எடுத்துச் சென்றவுடன், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த போக்குவரத்து நெரிசலை முற்றிலும் குறைப்பதற்காக, அம்மா அவர்கள் தமிழகத்திலே முதலமைச்சராக இருந்த காலத்திலே, சேலம் மாநகரப் பகுதியில் பல்வேறு உயர்மட்டப் பாலம் கட்டுவதற்காக அறிவித்து அந்தப் பணி அம்மாவின் ஆட்சிக் காலத்தில் துவக்கப்பட்டது. இன்றைக்கு அந்தப் பணிகளெல்லாம் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன, இன்றைக்கு பல்வேறு பாலப் பணிகள் நிறைவு பெற்று, மக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டு, போக்குவரத்து நெரிசல் இல்லாமல் மக்கள் செல்கின்ற காட்சியை நாம் பார்க்கின்றோம்.

இந்த கந்தம்பட்டி பைபாஸில் அடிக்கடி விபத்து ஏற்படுவதால், அங்கேயும் ஒரு உயர்மட்டப் பாலம் வேண்டுமென்று பலபேர் கோரிக்கை வைத்த காரணத்தினால், அந்த கோரிக்கையை ஏற்று, 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த உயர்மட்டப் பாலம் இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கின்றது. இதன் தொடர்ச்சியாக, தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள மூன்று உயர்மட்டப்பாலங்கள் கட்டப்பட்டு போக்குவரத்துக்கு திறக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது அடிக்கல் நாட்டப்பட்டுள்ள கந்தம்பட்டி பைபாஸ் பகுதியில் கிட்டத்தட்ட 5 மாத காலங்களில் நிறைவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்படும் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

15 நாட்களுக்கு முன், வீரபாண்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அரியாணூர் பிரிவு ரோடு திருச்செங்கோட்டுக்கு செல்கின்ற ஆட்டையம்பட்டி ரோட்டில் ஒரு உயர்மட்டப் பாலத்திற்கு அடிக்கல் நாட்டினேன். சங்ககிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மகுடஞ்சாவடியில் உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. ஆகவே, அந்த அரியாணூர் பிரிவு ரோடு, மகுடஞ்சாவடி பிரிவு ரோடு ஆகிய இரண்டு பகுதிகளிலுமே ஏற்படும் விபத்துக்களை தவிர்ப்பதற்காக அங்கேயும் 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு உயர்மட்டப் பாலங்கள் 15 நாட்களுக்கு முன்தான் அடிக்கல் நாட்டப்பட்டது.

கந்தம்பட்டி பைபாஸில் மட்டும், 2003 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை 100 பேர் விபத்தில் இறந்திருக்கிறார்கள், 143 பேர் காயமுற்றிருக்கிறார்கள். ஆகவே, இந்த விபத்துக்களை தவிர்ப்பதற்காகத் தான் அம்மாவின் அரசு உயர்மட்டப் பாலங்களுக்கு அடிக்கல் நாட்டி, பணியை விரைவில் முடித்து திறக்கப் போகிறோம்.

இன்றையதினம், பல்வேறு திட்டங்களுக்காக அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. வாழப்பாடி ஒன்றியத்தில் புழுதிக் குட்டை, சந்துமலை சாலையில், புங்கமடு அருகில் 3 கோடியே 50லட்சம் செலவில் ஒரு உயர்மட்டப் பாலம். பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியத்தில் அயோத்திப்பட்டினம், பேலூர், கிளாக்காடு சாலையில், தும்பல் அருகில் 3 கோடியே 50 லட்சம் செலவில் ஒரு உயர்மட்டப் பாலம். இந்தப் பாலத்தைச் சேர்த்து மூன்று பாலங்களுக்கு உங்களுடைய வாழ்த்தோடு இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கின்றது.

இதுதவிர, இந்த நிகழ்ச்சியின் வாயிலாக,

வருவாய்த் துறையின் சார்பாக 100 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டா, 100 பயனாளிகளுக்கு முதியோர் உதவித் தொகையும்,

ஊரக வளர்ச்சித் துறை சார்பில் சுமார் 81 நபர்களுக்கு பசுமை வீடுகள், இல்லக் கழிவறை போன்ற நலத்திட்ட உதவிகளும்,

கூட்டுறவுத் துறை சார்பில் 671 நபர்களுக்கு பயிர்க் கடனும்,

வேளாண் துறை சார்பில் தலா 1 நபர் வீதம் மூன்று நபர்களுக்கு விசை தெளிப்பான், நுண்ணுயிர் பாசன மானியம் மற்றும் வேளாண் இயந்திரங்களும்,

வனத் துறையின் சார்பில் 19 நபர்களுக்கு சிறு தொழில் தொடங்க கடனும்,

சமூக நலத் துறை சார்பாக 200 நபர்களுக்கு பிற்பட்டோர் நலத் துறை மூலமாக 10 நபர்களுக்கு விலையில்லா தையல் இயந்திரங்களும்,

ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலமாக 9 நபர்களுக்கு, ஊரக வளர்ச்சித் துறை மூலமாக 221 நபர்களுக்கு, பள்ளிக் கல்வித் துறை மூலமாக 2652 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்குதல் மற்றும் மாற்றுத் திறனாளித் துறை மூலம் இரண்டு நபர்களுக்கு பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்குகின்ற நிகழ்ச்சி இந்த விழாவின் மூலமாக நடைபெறுகிறது. இன்று மட்டும் 4049 பயனாளிகளுக்கு சுமார் 12 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்திலேயே சேலம் மாவட்டத்தில் பஸ்போர்ட் உருவாக்கப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அம்மாவினுடைய அரசு, அம்மா முதலமைச்சராக இருந்த காலத்தில் தொடங்கப்பட்ட திட்டங்கள் அனைத்தையும் நாம் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதில் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

திருமண உதவித் திட்டத்தின் கீழ், சேலம் மாவட்டத்தில் மட்டும் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் 48975 பேருக்கு கிட்டத்தட்ட 237.50 கிலோ தங்கம் கொடுத்திருக்கிறோம். இதற்காக 174 கோடியே 98 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

8 லட்சத்து 10 ஆயிரம் குடும்பங்களுக்கு விலையில்லா மிக்ஸி, கிரைண்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

12—ஆம் வகுப்பு பயின்ற 1 இலட்சத்து 72 ஆயிரம் மாணவ, மாணவிகளுக்கு 237.25 கோடி ரூபாய் செலவில் விலையில்லா மடிக்கணினி கொடுத்திருக்கிறோம்.

கிராமசபை கூட்டம் ஏற்கனவே அரசாங்கம் நடத்திக் கொண்டிருக்கிறது. எதிர்க்கட்சித்தலைவர் மு.க.ஸ்டாலின் ஒரு பஞ்சாயத்தில் உட்கார்ந்து கொண்டு கிராமசபை கூட்டம் என்று, இவர் தனியாக ஒரு கூட்டத்தைக் கூட்டி பேசும்பொழுது, பல்வேறு குற்றச்சாட்டை அரசின் மீது சுமத்துகிறார், இந்த ஆட்சியைப் பற்றி விமர்சனம் செய்கிறார். இந்த ஆட்சியில் எதுவும் நடக்கவில்லை என்று ஒரு தவறான குற்றச்சாட்டி கூறிக் கொண்டிருக்கிறார். இந்த ஆட்சியில் அதை தெளிவுபடுத்தவதற்காகத் தான் இந்தக் கூட்டத்தின் வாயிலாக நான் விளக்குகின்றேன்.

மாண்புமிகு அம்மா முதலமைச்சராக இருந்த காலத்தில், என்னென்ன திட்டங்கள் அறிவிக்கப்பட்டதோ, அதை அம்மா முதலமைச்சராக இருந்த காலத்தில் நடைமுறைப்படுத்தி வந்தார்கள். அதைத் தொடர்ந்து, அம்மாவின் மறைவிற்குப் பிறகு, அம்மாவினுடைய அரசு தொடர்ந்து நடைமுறைப்படுத்தி, மக்கள் வரவேற்பை பெற்றிருக்கிறோம். அதைப் பொறுக்க முடியாத ஸ்டாலின் அவர்கள் கிராமசபை கூட்டி பேசுகின்ற பொழுது, கிராமம் தான் கோயில் என்று பேசுகிறார். இது ஏற்கனவே நமக்குத் தெரியும், நானெல்லாம் கிராமத்தில் பிறந்து வாழ்ந்தவன். அவர் நகரத்தில் இருந்ததால், கிராமம் ஒரு கோயில் என்று இப்பொழுதுதான் புதிதாக கண்டுபிடித்திருக்கிறார். அவரது புது கண்டுபிடிப்பிற்கு, கின்னஸ் சாதனை கிடைத்தது மாதிரி, அவர் அந்த சாதனையை படைத்திருக்கிறார். கிராமத்தில் இருக்கிற மக்களுக்கு தேவையான

அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க வேண்டுமென்பதற்காகத் தான் அம்மா திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். கிராமத்தில் பிறந்த, ஏழை குடும்பத்தில் பிறந்தவர்களுக்கு அவர்களுக்கு இந்த திருமண உதவித் திட்டத்தில் பயன்பெற வேண்டும் என்பதற்காகத் தான் இந்தத் திட்டத்தை கொடுத்துக் கொண்டிருக்கிறோம். யார் ஆட்சிக்கு வந்தாலும், அம்மா கொடுத்த திட்டத்தை எவராலும் நிறுத்த முடியாத அளவிற்கு திட்டத்தைக் கொண்டு வந்த தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டம், மகளிர் சுய உதவிக் குழு. எந்த சுய உதவிக் குழுவுக்கும் கடன் கொடுக்கவில்லை என்றார். அவருக்கு புள்ளி விவரங்கள் தெரியாது. எப்பொழுதும் என்னை பற்றிய நினைப்பு தான் இருக்கிறது. தூங்குவது கூட என்னை நினைத்துக் கொண்டுதான் தூங்குவார் என்று நினைக்கிறேன். எப்பொழுது இந்த எடப்பாடி பழனிசாமியை முதலமைச்சரிலிருந்து அகற்ற வேண்டும், அந்த முதலமைச்சர் பதவியிலிருந்து அகற்றுவதற்கு எவ்வித தில்லுமுல்லு செய்யணும், எவ்வித சூழ்ச்சி செய்யணும், யார் யாரையெல்லாம் போராடுவதற்கு தூண்டி விடணும், இந்த நாட்டிலே எப்படியெல்லாம் சட்டம், ஒழுங்கு சீர்குலைவதற்கு என்னென்ன சூழ்ச்சி வேண்டுமோ அத்தனையையும் செய்து கொண்டிருக்கிறார். அத்தனையையும் மக்களுடைய ஆதரவோடு முறியடிக்கப்பட்ட ஆட்சி அம்மாவினுடைய ஆட்சி.

மகளிர் சுய உதவிக் குழுவிற்கு எதுவும் கொடுக்கவில்லை என்று பேசிக் கொண்டிருக்கிறார். இன்று சேலம் மாவட்டத்தில் மட்டும் 73796 மகளிர்சுய உதவிக் குழுவிற்கு 1874 கோடி வங்கிக் கடன் வழங்கப்பட்டது. இலட்சக்கணக்கான பேர் இந்த சுய உதவிக் குழு மூலம் கடன் பெற்று, சுயமாக தொழில் துவங்கக் கூடிய மாவட்டமாக சேலம் மாவட்டம் திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். சேலம் மாவட்டம் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் இருக்கும் அத்தனை மாவட்டங்களிலும் சுய உதவிக் குழுவிற்கு தேவையான நிதி

வழங்கப்படுகிறது, தேவையான மானியமும் வழங்கப்படுகிறது. அதைக் தெரிந்து கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் பேசவேண்டுமென்று என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழை மக்களுக்காகத் தான் பொங்கல் பரிசாக 1000 ரூபாய் கொடுத்தோம். எந்த ஆட்சியில் கொடுத்தார்கள், எந்த மாநிலத்தில் கொடுத்தார்கள்? எதிர்க்கட்சித்தலைவர், திமுக கட்சியின் தலைவர், அவருடைய கட்சியை சேர்ந்த வழக்கறிஞரை தூண்டிவிட்டு உயர்நீதிமன்றத்தில் வழக்குபோட்டு, தடையாணை வாங்க முயற்சி செய்தார். ஆனால், மக்கள் தான் எஜமானர்கள், மக்கள் தான் நீதிபதிகள், ஆகவே, நீதிமன்றத்தில் நீதி வென்றது. நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில், அனைத்து ஏழை மக்களுக்கும் பொங்கல் பரிசு வழங்கி, எல்லா இல்லங்களிலும் பொங்கல் பொங்குகின்ற காட்சியை பார்க்க முடிந்தது.

என்னுடைய விருப்பம் என்னவென்றால், பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். இந்த இயக்கத்தை உருவாக்குகின்றபொழுது, ஏழை, எளிய மக்களுக்காக இந்த இயக்கத்தை உருவாக்கினேன் என்று சொன்னார். அவர் ஏழை, எளிய மக்களுக்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி, ஏழை மக்களை வாழ்க்கையில் உயரச் செய்தார். அவருக்குப் பிறகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழை எளிய மக்களுக்காக திட்டங்களை வகுத்துஅறிவித்தார்கள். அதையெல்லாம் நாம் தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம். அந்த வழியில் தான் இந்த பொங்கல் பரிசு கொடுக்கப்பட்டது.

இன்றைக்கு, பல்வேறு தொழிற்சாலைகளில் பணிபுரிகின்றவர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் பொங்கல் போனஸ். தீபாவளி பண்டிகை போனஸ் கொடுக்கின்றார்கள், அதைப்போல நம்முடைய ஏழை மக்களுக்கு ஏன் கொடுக்கக்கூடாது? அதற்கு எந்தத் தடை வந்தாலும் அம்மாவினுடைய அரசு உடைத்தெறிந்து அவர்களுக்கு கொடுக்கும். ஏனென்றால், அவர்கள் உழைத்தால் தான் மற்றவர்கள் சிறப்பாக வாழமுடியும். அவர்கள் உழைத்தால் தான் மற்றவர்கள் சிறப்பாக வாழ முடியும். அவர்கள் வேர்வையாக சிந்துகிற இரத்தம் இந்த நாட்டின்

வளர்ச்சிக்காக சிந்துகின்ற வேர்வை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, அந்த ஏழைகளுக்கு வாரிவாரி இரண்டு பெரும் தலைவர்களும் கொடுத்தார்கள். அந்த வழியிலே, அம்மாவின் அரசும் வாரிவாரி வழங்கப்படும் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி அவர்களுக்கு போனஸ் கிடைக்கின்றபொழுது, ஏன் இவர்களுக்கு போனஸ் போல கொடுக்கக்கூடாது. ஆகவே, இது அரசின் கவனத்தில் இருக்கின்றது. எதிர்காலத்தில் அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கும், ஏழை தொழிலாளர்களுக்கும் அவர்களுக்கு பொங்கல் திருவிழா வருகின்றபொழுது அவர்கள் இல்லங்களில் சிறப்பாக கொண்டாடுகின்ற விதத்திலே அம்மாவின் அரசு செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில் 4868 விலையில்லா இருசக்கர வாகனம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இன்றைக்கு 4549 நபர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. தேர்தலின் போது சொன்னவற்றையெல்லாம் அம்மாவின் அரசு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது.

அம்மாவின் ஆட்சியில் சேலம் மாவட்டத்தில் மட்டும் 16000 பயனாளிகளுக்கு 270 கோடி ரூபாயில் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகளை கட்டிக் கொடுத்திருக்கிறோம். சேலம் மாவட்டத்தில் உள்ள 1490 நெசவாளர்களுக்கு பசுமை வீடுகள் அம்மாவினுடைய அரசால் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கிழ் 16700 நபர்களுக்கு 183 கோடி ரூபாயில் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. பாரதப் பிரதமர் வீடு கட்டும் திட்டத்தில் 11940 நபர்களுக்கு 203 கோடி ரூபாயில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 81233 விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமாக 408.72 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. 4 லட்சத்து 11 ஆயிரத்து 132 விவசாயிகளுக்கு சுமார் 1998 கோடி ரூபாய் பயிர்க் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது. இதெல்லாம் எதற்காக சொல்கிறேனென்றால், இந்த ஆட்சியில் எந்தத் திட்டமும் நிறைவேறவில்லை. இவ்வளவும் சேலம் மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள். இன்றைக்கு ஆட்சி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருப்பதன் காரணமாகத்தான் ஒரு தனியார்

துறை, இந்தியாவிலேயே நிர்வாகத் திறமையுள்ள மாநிலம் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருக்கிறது என்று அறிவித்திருக்கிறது.

3799 மாற்றுத் திறனாளிகளுக்கு 14.4 கோடி ரூபாய் கடன் உதவி வழங்கப்பட்டிருக்கிறது.

இன்றைக்கு பருவமழை போதிய அளவு பெய்யாததால் வறட்சி ஏற்படும் சூழ்நிலை. பருவமழை பெய்கின்ற காலங்களில் அந்த மழைநீரை முழுமையாக சேமித்து வைப்பதற்காக குடிமராமத்துத் திட்டத்தை இன்றைக்கு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது.

சேலம் மாவட்டத்தில் 70 புதிய வழித்தடங்களை பேருந்து வசதி செய்து கொடுத்திருக்கிறோம்.

டாக்டர் முத்துலட்சுமி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தில் அம்மா மகப்பேறு சஞ்சீவி பெட்டகம், கருவிலிருக்கும் சிசுவிற்கு ஊட்டச்சத்து, அம்மா பரிசு பெட்டகம், பிறந்த குழந்தைக்கு தாய்ப்பால் வங்கி இவையெல்லாம் அம்மாவின் ஆட்சியில் கொண்டு வந்த திட்டம். ஏழை தாய்மார்கள் பெற்றெடுக்கின்ற குழந்தைகள் நலமோடு இருக்க வேண்டும் என்று அம்மா இருந்தபொழுது அறிவித்த திட்டத்தை அம்மாவின் அரசு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது.

அன்னதானத் திட்டம், முஸ்லிம் பெருமக்கள் மெக்கா புனித யாத்திரை செல்வதற்கு மத்திய அரசு கொடுக்கப்பட்ட மானியத்தை நிறுத்தியதால் இப்பொழுது 6 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறது. கிறிஸ்துவர்கள், ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொபவர்களின் எண்ணிக்கையை 500–லிருந்து 1000 ஆக உயர்த்தியிருக்கிறோம்.

இறந்தவர்கள் உடம்பில் இருந்து உறுப்புகளை எடுத்து மற்றவர்கள் உடலில் பொருத்தும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.

போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக இன்றைக்கு அம்மாவின் அரசு சேலம் முதல் செங்கப்பள்ளி வரை தேசிய நெடுஞ்சாலை 103 கிலோ மீட்டருக்கு தற்போது 4 வழிச் சாலையாக

இருப்பதை 8 வழிச் சாலையாக மாற்றுவதற்கு அரசு எடுத்த நடவடிக்கையின் மூலமாக மத்திய அரசு அதற்கு நிதியை ஒதுக்கியிருக்கிறது. ஒரு கிலோமீட்டருக்கு 18 கோடி ரூபாய் அதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு மட்டும் 1854 கோடி ரூபாய் மத்திய அரசு நமக்கு இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கியிருக்கிறது. இந்தப் பணி மிக விரைவாக தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், நிலம் கையகப்படுத்தும் பணிக்கு 83 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆக மொத்தம் இந்த 4 வழிச்சாலையை 8 வழிச்சாலையாக விரிவாக்குவதற்கு ஒதுக்கப்பட்ட நிதி 1937 கோடி ரூபாய் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் ஆகிய 4 மாவட்டங்களை இணைக்கும் சேலம், ஊத்தங்கரை, திருப்பத்தூர் தேசிய நெடுஞ்சாலை என்.எச்.179ஏ, 44 கிலோமீட்டர் நீளத்திற்கு இரு வழிச் சாலையிலிருந்து 4 வழிச் சாலையாக அகலப்படுத்துவதற்கு ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டிருக்கிறது.

வேலூர் மாவட்டத்தில் உள்ள ஊத்தங்கரை முதல் வாணியம்பாடி வரை 45.20 கிலோமீட்டர் சாலையை 289.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4 வழிச்சாலையாக அகலப்படுத்தும் பணி செயல்படுத்தப்பட்டுள்ளது. இவையெல்லாம் அம்மா அரசின் சாதனை என்பதை சொல்லிக் கொள்ள விழைகின்றேன். இன்னும் பல திட்டங்கள் அம்மா ஆட்சியில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

சேலம் மாநகரத்தில், பாதாள சாக்கடைப் பணி, குடிநீர் குழாய் பதிக்கின்ற பணி, மின்சாரம் தடையில்லாமல் கிடைப்பதற்கு கேபிள் பதிக்கின்ற பணி போன்றவையெல்லாம் செய்கின்றபொழுது சாலைகளெல்லாம் மேடு பள்ளமாகி உள்ளது. அதையெல்லாம் சரிசெய்து மிக சிறப்பான சாலையாக சீரமைப்பதற்கு அம்மாவின் அரசு 77 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறது. மாநகராட்சி மூலமாக அதற்கு ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டிருக்கிறது. அந்தப்பணி துரிதமாக செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சேலம் மாநகரத்திலுள்ள அத்தனை

சாலைகளும் அம்மாவின் அரசால் சீர்செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அம்மாவின் அரசு தான் இத்தனையும் செய்திருக்கிறது. சேலம் மாநகரத்தில் வருகின்றபொழுது, வெளிநாடுகளில் இருக்கின்ற, அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகளில் இருக்கின்ற நகரங்களில் நுழைவது போன்ற நிலைமையை உருவாக்குகின்ற அளவிற்கு, சேலம் சீர்மிகு நகரமாக உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுமக்கள் மாலை நேரங்களிலும், காலை நேரங்களிலும் பூங்காவில் நடைபயிற்சி மேற்கொள்வதற்கும் 13 பூங்காங்களை அமைத்துக் கொடுத்திருக்கிறோம். என்னென்ன மக்கள் கேட்டார்களோ அதையெல்லாம் செய்து கொடுத்து விட்டோம். அம்மாவின் அரசு வந்த பிறகு எப்படி இருக்கிறது, ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இருந்து எப்படி இருந்தது என்று எண்ணிப் பாருங்கள். சேலம் மாநகரமும் சரி, சேலம் மாவட்டமும் சரி, தமிழ்நாடு முழுவதும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எப்படியெல்லாம் திட்டங்கள் கொண்டு வந்தார்கள், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா ஆட்சியில் கொண்டு வந்த திட்டங்கள், அம்மா மறைவிற்குப் பிறகு அம்மாவின் அரசு கொண்டு வந்த திட்டங்கள் இதையெல்லாம் ஒப்பிட்டுப் பாருங்கள். நான் சொல்வதெல்லாம் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள், நிறைவேற்றப்பட இருக்கின்ற திட்டங்கள், புதிய திட்டங்கள்.

வேண்டுமென்றே திட்டமிட்டு, ஊர் ஊராகச் சென்று இந்த ஆட்சியிலே எதுவும் செய்யவில்லை, மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை என்று தவறான செய்தியை எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்து வருகிறார். இதெல்லாம் உண்மைக்குப் புறம்பானது. அவருக்கு அரசியல் ரீதியாக எங்களை எதிர்க்க முடியவில்லை. ஆகவே, குறுக்கு வழியை கையாண்டு பொய்யான செய்தியை மக்களிடத்தில் சொல்லிக்

கொண்டிருக்கிறார். அம்மாவின் அரசு உங்களின் அரசு, மக்களின் அரசு, மக்களுக்கு என்ன தேவையோ அதை நிறைவேற்றுகின்ற அரசு.

கோடை காலத்தில் குடிநீர் பிரச்சினை ஏற்படும் என்று கருதி அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஆலோசனைகளைப் பெற்று, என்னுடைய தலைமையில், இரண்டு நாட்களுக்கு முன்பு தலைமைச் செயலகத்திலே நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு மூத்த அமைச்சர்களும், துறையைச் சார்ந்த அமைச்சர்களும் கலந்து கொண்டனர். கோடை காலத்தில் குடிநீர் பிரச்சினை வருமா என்று ஆய்வு செய்து, அந்த ஆய்வின் அடிப்படையில் குடிநீர் பிரச்சினையை போக்குவதற்கு 158 கோடி ரூபாய் அம்மாவினுடைய அரசு நிதி ஒதுக்கீடு செய்து முன்னெச்சரிகையாக எடுத்திருக்கிறது. ஆகவே, எதுவும் வருவதற்கு முன்பாகவே நடவடிக்கை எடுக்கிறோம். ஆகவே, அம்மாவின் அரசைப் பொறுத்தவரைக்கும், வேகமாக, துரிதமாக நடவடிக்கை எடுத்து மக்களுக்கு பிரச்சினையில்லாமல் செயல்படுகின்ற அரசு அம்மாவினுடைய அரசு. வேண்டுமென்றே திட்டமிட்டு, சில அரசியல் சூழ்ச்சியாளர்கள், இந்த ஆட்சி கலைக்கப்பட வேண்டும், இந்தக் கட்சிக்கு களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்று முனைந்தால் அவர்கள் எடுக்கின்ற அத்தனை முயற்சியும் தோல்வியில் தான் முடியும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அம்மாவின் அரசு இன்றைக்கு சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது, அம்மாவின் அரசிற்கு நீங்கள் அத்தனை பேரும் துணை நிற்க வேண்டும் என்று கூறி, அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்து விடைபெறுகின்றேன்,

நன்றி, வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**